(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.73/2014 |
| Deposition Of Witness for | : | PW7 |
| Name | : | **Thiru.A.Mondy** |
| Father's Name | : | Thiru. Alagu Sundaram |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **5th June 2025.**

(எதிரி ஆஜர்.. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை</u> :

1. நான் திருப்பத்தூரில் செயற்பொறியாளர் (பகிர்மானம்)ஆக பணிபுரிந்து 30.04.2025 அன்று பணிஓய்வு பெற்றேன். 02.09.2010 முதல் 09.11.2011 வரை திருப்புவனத்தில் உதவிசெயற்பொறியாளர் (பகிர்மானம்)ஆக பணிபுரிந்தேன். 31.08.2011-ல் மானாமதுரையில்

செயற்பொறியாளர்(பகிர்மானம்) அவர்கள் பணிஓய்வு பெற்றதால் நான் 01.09.2011 முதல் மானாமதுரை செயற்பொறியாளர்(பகிர்மானம்)ஆக கூறுதல் பொறுப்பு வகித்தேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 09.11.2011 வரை கீழடியில் இளமின்பொறியாளர் நிலை–I ஆக பணிபுரிந்தார்.

2. தொழிற்சாலைகளுக்கு மின்இணைப்பு Tariff III–B–ல் கொடுக்கப்படுகிறது. திரு.முருகசாமி என்பவர் தொழிற்சாலை மின்இணைப்பு வேண்டி கொடுத்த மனு அடங்கிய கோப்பினை நான் பார்வையிட்டேன். அந்த கோப்பினை பார்வையிட்டதிலிருந்து 01.08.2011 ல் திரு.முருகசாமி என்பவர் தொழிற்சாலை மின்இணைப்பு வேண்டி இளமின்பொறியாளர் எதிரி மீனாட்சிசுந்தரத்திடம் மனு கொடுத்த விபரத்தை தெரிந்து கொண்டேன். 02.08.2011 அன்று எதிரி புகார்தாரரிடம் ரூ.50/–ஐ வசூல் செய்து பதிவேட்டில் பதிவு செய்துள்ளார். இதன் அடிப்படையில் திரு.முருகசாமி EMD தொகை ரூ.27,600/–ஐ கட்டியுள்ளார். 05.08.2011 அன்று எதிரி Estimate தயார் செய்து எனக்கு அனுப்பினார். 10.08.2011 அன்று நான் புகார்தாரரின் இடத்தை தள ஆய்வு செய்தேன். 16.08.2011 அன்று நான் செயற்பொறியாளருக்கு அந்த மதிப்பீடு மற்றும்

எனது ஆய்வறிக்கையை அனுப்பினேன். அதன்பிறகு செயற்பொறியாளர் Estimate Sanction உத்தரவு பிறப்பித்தார். அதனடிப்படையில் 03.09.2011 அன்று முருகசாமி Development Charges, Meter Caution Deposit மற்றும் Service Connection Charges ஆகிய தொகைகளை செலுத்தினார். மேற்படி தொகைகளை செலுத்துமாறு உதவி மின்பொறியாளர் Consumer–க்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டும். எதிரி Work order application எனக்கு அனுப்பினார், நான் அதை 06.09.2011 அன்று செயற்பொறியாளருக்கு அனுப்பி வைத்தேன். அதன்பிறகு மானாமதுரை செயற்பொறியாளர் கூடுதல் பொறுப்பு நான் வகித்ததால் அந்த Work order–யை செயற்பொறியாளர் என்ற முறையில் நான்தான் Sanction செய்தேன்.

3. 09.11.2011 அன்று முற்பகலில் நான் பணிஇடமாறுதல் செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டேன். அதன்பிறகு அன்றையதினம் நண்பகல் 1.00 மணியளவில் நானும் புதிதாக பணியில் சேர்ந்த உதவி செயற்பொறியாளர் பாலசுப்பிரமணியம் மற்றும் எதிரி ஆகியோர் மானாமதுரை சென்று மதிய உணவு அருந்தினோம். என்னிடம் காண்பிக்கப்படும் முருகசாமி என்பவரின் மின் இணைப்பு தொடர்பான கோப்பில் உள்ள அனைத்து ஆவணங்களிலும் சான்றளிக்கப்பட்ட நகல்

(certified copy) என்று நான்தான் கையொப்பம் செய்துள்ளேன். அந்த கோப்பு ஏற்கனவே அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு சம்பந்தமாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. முருகசாமி என்பவரின் தொழிற்சாலைக்கு மின் இணைப்பு கொடுப்பதில் எதிரியால் எந்த காலதாமதமும் செய்யப்படவில்லை என்றால் நான் பணியில் அங்கு இருந்தவரை காலதாமதம் செய்யப்படவில்லை. முருகசாமியின் தொழிற்சாலை கீழடி சரகத்தில் உள்ளது என்றால் சரிதான். மின்இணைப்பிற்குண்டான தளவாட சாமான்கள் மானாமதுரையில் உள்ள உபபண்டகசாலையிலிருந்துதான் பெறப்படவேண்டும் என்றால் சரிதான். அந்த பண்டகசாலையில் எல்லா தளவாட சாமான்களும் ஒரே நேரத்தில் கிடைப்பதில்லை என்றால் ஒரே நேரத்தில் இருக்கவும் செய்யும், சில நேரங்களில் இல்லாமலும் இருக்கும்.

2. இந்த மானாமதுரை உபபண்டக சாலையிலிருந்து முருசாமியின் தொழிற்சாலைக்கு 21.09.2011, 28.09.2011, 18.10.2011 மற்றும் 25.10.2011 ஆகிய நான்கு நாட்களில் தளவாட சாமான்கள்

எடுக்கப்பட்டதா என்றால் அது பற்றி எதிரிக்குதான் தெரியும். 03.10.2011, 04.10.2011, 24.10.2011, 29.10.2011 ஆகிய நான்கு நாட்களில் முருகசாமியின் தொழிற்சாலைக்கு மின்இணைப்பு பணிகள் இந்த எதிரியால் செய்யப்பட்டுள்ளதா என்றால் இந்த விபரம் குறித்து எதிரிக்குதான் தெரியும். மேற்படி பணிகளை மேற்பார்வை செய்யவேண்டியது என்னுடைய கடமை என்றால் அதற்கென்று Section Officer இருக்கிறார்கள். அந்த Section Officer–ஐ மேற்பார்வை செய்வது என்னுடைய கடமை என்றால் சரிதான். எதிரி அந்த கடமையை செய்தாரா அல்லது Section Officer அவரது வேலையை செய்தாரா என்று நான் மேற்பார்வை செய்தேனா என்றால் எனது பணிக்காலத்தில் Inspection செய்துவிட்டுதான் வந்தேன். அப்படி Inspection சென்ற போது மேற்படி தேதிகளில் பணிகள் செய்யப்பட்டிருந்ததா என்று நான் தெரிந்து கொண்டேனா என்றால் பணிகள் நடந்து கொண்டிருந்தது.

3. எனக்கு 09.11.2011 அன்று பணிஇடமாறுதல் என்று தெரிந்ததால் Handing over of charge Notes தயார் செய்ய 08.11.2011–ம் தேதி காலை 10.00 மணிக்கே எனக்கு கீழ் பணிபுரியும் எதிரி உட்பட அனைத்து அலுவலர்களையும் எனது அலுவலகத்திற்கு வரச்சொல்லியிருந்தேனா

என்றால் இல்லை. 08.11.2011—ம் தேதி காலை 10.00 மணிக்கே எதிரியை எனது அலுவலகத்திற்கு வரச்சொல்லி அன்று மதிய உணவு இடைவேளை வரை எதிரி என்னோடு எனது அலுவலகத்தில் இருந்தார் என்றால் இல்லை. நான் 08.11.2011 அன்று எதிரியை எனது அலுவலகத்திற்கு வரச்சொல்லி எதிரி அவ்வாறு வந்திருந்தார் என்றும் அன்றைய தினம் மதிய உணவு இடைவேளை வரை என்னுடன் எனது அலுவலகத்தில் இருந்தார் என்றும் நான் தற்போது அதை மறைத்து உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சாட்சி தானாக கடந்த 08.11.2011 அன்று எதிரி ஒரு நபர் மின் கம்பம் ஊன்றுவதற்கு ஆட்சேபனை தெரிவித்திருந்ததற்கு நோட்டீஸ் கொடுக்குமாறு நான் சொல்லியிருந்ததன் அடிப்படையில் நோட்டீஸ் கொடுத்து அதன் நகலை கொண்டு வந்து 08.11.2011 அன்று என்னிடம் எதிரி கொடுத்தார் என்று கூறுகிறார். அந்த சமயத்தில் மணி எத்தனை இருக்கும் என்றால் ஞாபகமில்லை.

4. நான் 09.11.2011 அன்று பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு அ.த.சா.ஆ.3 கோப்பில் 16.11.2011—ம் தேதி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல.

**<u>அரசு தரப்பில் மறுவிசாரணை:</u>**

என்னிடம் காண்பிக்கப்படும் அ.த.சா.ஆ.3 கோப்பில் உள்ள Certified copy என்று பேனாவில் எழுதப்பட்டு அதற்கு கீழ் 16.11.2011 அன்று போடப்பட்டுள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

**<u>எதிரி தரப்பில் மறுகுறுக்கு விசாரணை:</u>**

16.11.2011 அன்று நான் Certified copy என்று அ.த.சா.ஆ.3 கோப்பில் கையொப்பம் செய்தபோது அதன் அசல் ஆவணங்களை பார்த்து ஒப்பீடு செய்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அந்த அசல் ஆவணங்கள் அலுவலகத்தில் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எந்த அலுவலகத்தில் இருந்த அசல் ஆவணங்களை பார்த்து ஒப்பீடு செய்து அ.த.சா.ஆ.3 கோப்பில் Certified copy என்று எழுதி நான் கையொப்பம் செய்தேன் என்றால் ஞாபகமில்லை. 09.11.2011 அன்று நான் பணியிடமாறுதலில் அடுத்த எந்த அலுவலகத்தில் பணியில் சேர்ந்தேன் என்றால் பரமக்குடி உட்கோட்டத்திலிருந்து காவனூர் அலுவலகத்தில் பணியில் சேர்ந்தேன். 16.11.2011 அன்று நான் காவனூர் அலுவலகத்தில்தான் பணியில் இருந்தேன் என்றால் அது பற்றி ஞாபகமில்லை. அ.த.சா.ஆ.3 Certified copy அனைத்தும் மானாமதுரை

**அலுவலகத்தில் வைத்து கையொப்பம் செய்தேனா அல்லது காவனூர் அலுவலகத்தில் வைத்து கையொப்பம் செய்தேனா என்றால் ஞாபகமில்லை.**

**மறுவிசாரணை:** இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.06.05 17:21:45 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.